Ph : 04175 - 236654 I 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில் 23ஆவது ஆண்டு விளையாட்டு விழாவில் நவீன உடற்பயிற்சிக் கூடம் திறப்பு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 23ஆவது ஆண்டு விளையாட்டு விழாவில் நவீன உடற்பயிற்சிக் கூடம் திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார். செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்** முன்னிலை வகித்தார். பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்** வாழ்த்துரை வழங்கினார்.

விளையாட்டறிக்கையினை உடற்கல்வி இயக்குநர் **எம்.கோபி** வாசித்தார். அறக்கட்டளை உறுப்பினர்கள் திரு.**ஏ.அருணாசலம்**, திரு.**ஏ.என்.இ.திருநாவுக்கரசு**, திரு.**ஏ.சாந்தகுமார்**, திரு.**எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு**, திரு.**எச்.எம்.ஜெகதீசன்**, திருமதி.**ஏ.டி.பி.எஸ்.கஸ்தூரி அம்மாள்**, திருமதி.**எம்.இராஜகுமாரி**, திருமதி.**பி.கலைமணி**, திருமதி.**குமுதா அருணகிரி**, திருமதி.**ச.தமிழரசி** திருமதி.**சி.சசிகலா**, டாக்டர் **தையா கிருஷ்ணமூர்த்தி**, திருமதி.**என்.இராதாபாய் அம்மாள்**, திருமதி.**மணிமொழி முத்துசாமி**, மற்றும் கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாகக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக மேனாள் பொறுப்புத் துணைவேந்தரும், தற்போதைய துறைத்தலைவருமான முனைவர் **கிரேஸ் ஹெலினா** கலந்து கொண்டு நவீன உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்து விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரை நிகழ்த்திப் பல்வேறு விளையாட்டுக் போட்டிகளில் பங்குபெற்று வென்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பித்தார். "மாணவர்கள் உடம்பினை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், முயற்சியும் தளராத பயிற்சியும் இருந்தால் எத்தகைய சாதனைகளையும் நிகழ்த்தலாம் என்றும் எடுத்துக் கூறினார். விளையாட்டு ஆண்களுக்கும், பெண்களுக்கும் மிகவும் அவசியம் என்பதையும், எல்லா வயதினருக்கும் உடற்பயிற்சியும், நடைப்பயிற்சியும் தேவை என்பதையும் பல்வேறு எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கினார்". நிறைவாக மாணவ, மாணவியர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், பத்திரிக்கை நண்பர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

தாளாளர்

